given the benefit, which was just given by the Government through their last Budget, namely, grant of two advance increments?

THE HON THIRU S. MADHAVAN : The hon. Memeber may put a separate question.

"*Manora*".

* 115 Q.—THIRU N. SUNDARESA THEVAR : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that numerous people daily visit the ancient monument "Manora" in Pattukkottai taluk of Thanjavur district; and

(*b*) whether there is any proposal to develop this place as a tourist resort?

"மனோரா"

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை தாலுகாவில் உள்ள "மனோரா" என்ற புராதன சின்னத்தைத் தினமும் ஏராளமான பார்வையாளர்கள் பார்த்துச் செல்லுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) இதை சுற்றுலாவிற்கு உகந்த இடமாக அபிவிருத்தி செய்யும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர் : கிழக்குக் கடற்கரை ரஸ்தா அபிவிருத்தித் திட்டம் செயல்படும் நேரத்தில் மதுரையிலிருந்து ராமேஸ்வரம் செல்லும் பாதையில் மையமாக 'மனோரா' இருப்பதால் அந்தப் புராதன சின்னத்தை அதிகமான பேர்கள் கண்டு செல்வதாலும் சிறப்பான இடமாக இருப்பதாலும் இனிமேலாவது அதை முன்னேற்றம் செய்ய திட்டம் ஏற்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : கிழக்குக் கடற்கரை சாலை அமைக்கப்பட்டு அது நிறைவேற்றப்படும்போது பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கவனத்தில் அதை வைத்துக்கொள்வார்கள்.

திரு. வி. தங்கபாண்டியன் : 'மனோரா' பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர் கதை ஒன்றில் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு முக்கியத்துவம் கொடுத்து எப்போதும் பொதுமக்கள் காண்கிற வகையில் Beauty spot ஆக வைக்க அரசு முயற்சிக்குமா?

4th March 1969]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : முன்பே சொன்னேன். பொதுப்பணி அமைச்சர் அவர்கள் அந்த 'மனோரா' வைப் பார்த்திருப்பார்கள். அந்த சாலை அமைக்கப்படும்போது அதைக் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

Mr. CHAIRMAN : Questions 116 to 120 deal with the Highways Road Inspector. We will take them all together.

Highways Road Inspectors.

* 116 Q.—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are more than one thousand Highways Road Inspectors in the State who have put in more than five years' service and yet have not been made permanent; and

(b) if so, whether steps will be taken to make permanent all such Highways Road Inspectors?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) மொத்தமாக உள்ள 2,532 சாலை ஆய்வாளர் பதவிகளில் 1,767 பதவிகள் மாநிலப் பணியின்கீழ் கொண்டு வரப்பட்டன. எஞ்சிய 765 பதவிகள் மாநிலப்பணியின் கீழ் கொண்டுவரப்படவில்லை.

(இ) 1,767 மாநிலப்பணிப் பதவிகளில் 1,042 பதவிகள் நிலைப் படுத்தப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள 725 பதவிகள் தாற்காலிக பதவிகளாகவே நீடித்து வரப்படுகின்றன. சாலை ஆய்வாளர் ஒருவர் 22½ மைல் கொண்ட சாலையாவது பார்வையிடவேண்டும் என்னும் வரையறைக்குட்பட்டு மாநிலப்பணியின் கீழ் கொண்டு வரப்படாது எஞ்சியுள்ள சாலை ஆய்வாளர்களின் பணியினை மாநிலப் பணித்தரத்தின் கீழ்கொண்டு வருவதை ஆலோசிக்கும் போது தற்காலிகப் பதவிகளையும் நிலைப்பணியாக்குவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

* 117 Q.—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Highways Road Inspectors are now being paid out of the works estimate and not as in the case of other subordinate services; and

(b) if so, whether there is any proposal to bring them on a par with other Engineering Subordinate Services in the matter of payment?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) சாலை ஆய்வாளர்களின் ஊதியம் அவர்கள் பணிக்கணக்கிற்கேற்ப வழங்கப் படுகிறது.

(இ) முறையாகச் செயல்படும் பணி போன்று பொது சார்நிலைப் பணியின்கீழ் கொண்டு வரும் செயற்குறிப்பு ஏதுமில்லை.